# தெரணியகல பிரதேச சபை
# கேகாலை மாவட்டம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 மார்ச் 30 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 மே 31 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

## 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, தெரணியகல பிரதேச சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தெரணியகல பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) ஊழியர் கடன் பதிபேவட்டின் படி 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையான ஊழியர் கடன் மீதி ரூபா 2,321,135 ஆன போதிலும் ஐந்தொகையில் இது ரூபா 1,446,624 ஆகக் காண்பிக்கப்பட்டமையால் ரூபா 874,511 ஆல் சொத்துக்கள் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) நீர்க் களஞ்சியம் மற்றும் மின்சாரக் களஞ்சியக் கொள்வனவு ரூபா 3,603,870 இற்கு உரிய இருப்புக் கணக்கு வரவு வைக்கப்பட வேண்டிய போதிலும்

| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
|---|---|---|---|---|
| (i) | வீதவரியும் வரியும் | 3,846 | 5,736 | 1,890 |
| (ii) | குத்தகை வாடகை | 3,718 | 4,101 | 383 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 552 | 662 | 110 |
| (iv) | ஏனைய வருமானம் | 6,606 | 6,635 | 287 |

### 2.2.2 வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம்

வருடாந்த மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு சபையின் அதிகாரப்பிரதேசத்தில் நிலவிய சகல வியாபார நிறுவகங்களில் வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணமாக மாகாண சபையின் பிரதான செயற்லாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டியிருந்த பணம் பின்வருமாறாகும்.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்றத் தண்டப்பணம் | 3,552,994 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 2,000,000 |

### 2.2.4 நீர்க்கட்டணம்

13 நீர்ப் பயன்பாட்டாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 25,063 தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 விளைவற்ற மற்றும் குறைவான பயன்பாடுடைய பௌதீக வளங்கள்

ரூபா 882,129 தொகையான சொத்துக்கள் விளைவற்றும் குறைவான பயன்பாட்டுடனும் நிலவியமை தெரிவுக் கணக்காய்வின் போது கண்டறியப்பட்டது.

### 2.4 செயற்பாட்டு/ முகாமைத்துவ திறமையீனங்கள்